18.1.2011

S/ No: 47

<u>சுருக்கம்</u>

பள்ளிக் கல்வி – குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009–ன் கீழ் பிரிவு 12 (1) (c) மற்றும் பிரிவு 13(1) ஐ மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்துதல் – சம்பந்தப்பட்ட ஆய்வு அலுவலர்களுக்கும் மற்றும் இயக்குநர்களுக்கும் அனுமதி வழங்குவது – ஆணை வெளியிடப்படுகிறது.

<u>பள்ளிக் கல்வித்(சி2)துறை</u>

அரசாணை(நிலை)எண்.9

நாள்: 18.01.2011.
(திருவள்ளுவர் ஆண்டு 2042
தை 4)

படிக்கப்பட்டவை:

1. மத்திய அரசின் மனிதவள மேம்பாட்டு துறை இயக்குநரின் கடித எண்.1–15/10–EE4, நாள் 23.11.2010
2. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கடித ந.க.எண்.9437/ஈ3/2010, நாள் 20.12.2010.

<u>ஆணை:–</u>

குழந்தைகளுக்கான தொடக்கக்கல்வியும் அடிப்படை உரிமைகளுள் ஒன்றாக கருதப்பட ஏதுவாக இந்திய அரசியலமைப்புச் சட்டத்திற்கு தகுந்த திருத்தம் 2002 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது. இதனையொட்டி குழந்தைகளுக்கான இலவச மற்றும் கட்டாய கல்வி உரிமைச்சட்டம் 2009, மைய அரசால் இயற்றப்பட்டு, இச்சட்டம் 01.04.2010 முதல் நடைமுறைக்கு வந்துள்ளது. 6 முதல் 14 வயதுக்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் தரமான இலவச தொடக்கக் கல்வி வழங்குவதே இச்சட்டத்தின் முக்கிய நோக்கமாகும். இச்சட்டத்தின் கீழ் மாநில அரசுகள் தகுந்த விதிகளை இயற்ற மாநில அரசுகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2. குழந்தைகளின் இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டம் 2009இல் பிரிவு 13(1)–இல் எந்த ஒரு பள்ளியும் குழந்தையை சேர்க்கும்போது எந்த ஒரு பரிசீலனை நடைமுறைக்கும் உட்படுத்தக்கூடாது என்றும், மாணவர் சேர்க்கையின்போது பின்பற்ற வேண்டிய வழிமுறையை தெளிவாக கூறியுள்ளது என்றும், முதல் வகுப்பிலோ அல்லது ஒரு பள்ளி, பள்ளிக்கு முந்தைய கல்வியை (Kinder Garden) வழங்குமானால் அந்த வகுப்பில் சேரும் மொத்த குழந்தைகளில் குறைந்தது 25 விழுக்காடு குழந்தைகளை அருகாமை